1st February 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, வாடகைக் கார் ஓட்டுகிறவர்கள் பலருக்கு லைசென்சு இல்லை. லைசென்சு இல்லாமலே ஓட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஓட்டுபவர்களுக்கு 'டிஸ்க்' ஒன்று கொடுக்கிறார்கள். அந்த டிஸ்கை லைசென்சு பெற்றிருப்பவர்கள் அவர்கள் லைசென்சு, இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்கள் நகரத்தில் கார்களை ஓட்டுவதாகச் சொல்கிறார்கள். இது அமைச்சருக்குத் தெரியுமா? அதையறிந்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படி ஏதேனும் தகவல் இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் அறிந்த அளவில் அது பெருமளவில் நடப்பதாகத் தெரிகிறது. லைசென்சு பெற்றவர்கள் ஏழெட்டு மணி நேரம் ஓட்டிவிட்டு மாலை நேரத்தில் அந்த டிஸ்கை சாதாரணமானவர்களிடம் கொடுத்து அவர்கள் காரை ஓட்டுவதாகவும் அதனால் பல இடையூறுகள் ஏற்படு வதாகவும் தெரிகிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பொதுவாக இதுபற்றி அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கும். ஆனால் 'ஸ்பெசிபிக்காக' குறிப்பிட்ட வகையில் ஏதேனும் புகார் இருந்தால், மேலும் அது அரசிற்கு வசதியளிப்பதாக இருக்கும்.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III. ANNOUNCEMENT *re* MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN: I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

THIRU G. SWAMINATHAN: Sir, there is a Call Attention Notice to-day.........(interruption).

MR. CHAIRMAN: The hon. Member may please wait. Rule 42 (3) has to be suspended. I am taking it up now.

IV. GOVERNMENT MOTION *re* SUSPENSION OF RULE 42(3) OF THE COUNCIL RULES.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-வது விதி, அதன் (3) துணைவிதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில், தற் காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின் கீழ் ஒன்றுக்கு மேற் பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

Mr. CHAIRMAN : The question is—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised to-day".

The motion was put and carried.

V. CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE.

(1) Non-payment of salary to teachers in Singanallur Municipal schools and consequent hardship caused to them.

Thiru V. ISVARMURTI : I like to call the attention of the Hon. the Minister for Education and Local Administration to an urgent matter of public importance, namely, the non-payment of salary to teachers employed in Singanallur Municipal schools from November 1971 and the consequent hardship caused to them.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சிங்கநல்லூர் நகராட்சியின் ஆரம்பக் கல்விக் கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினை ஈடு செய்யும் வகையில் 1966-67 முதல் 1969-70 வரைக்கான ஆண்டுகளுக்குப் பற்றாக்குறை உதவித்தொகை அளிக்கக் கோரி வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு மாநில தலக்கணக்காயரின் உதவியுடன் இப்பிரச்னையை ஆராய்ந்ததில் சிங்கநல்லூர் நகராட்சியானது அரசின் உதவித் தொகையினைப் பெறும் தகுதியை இழந்துள்ளது என முடிவெடுத்துள்ளது. இந்த நகராட்சியின் நிதி நிலையை ஆராய்ந்ததில் இந்நகரவையின் பொதுக் கணக்கு மிகக் கூடுதலான இருப்புடனேயே இவ்வாண்டுகளில் முடிந்திருக்கிறது. இந்நகராட்சி கூடுதலான பொதுக்கணக்கிலிருந்தே இப்பற்றாக்குறையினை நிறைவு செய்திருக்கலாம். மேலும் சமீபத்தில் அரசாணை எண்: 1766 கல்வி 14—10—1971-ல் அரசு இந்நகராட்சிக்கு ரூ. 1,23,852 1971-72-ஆம் ஆண்டுக்கு முன்னுதவித் தொகை அளித்துள்ளது. இந்நகராட்சி முப்பத்தைந்து இலட்ச ரூபாய் வரி பாக்கி வைத்துள்ளது. இதில் கல்வி வரி மட்டுமே ஒன்றேகால் இலட்ச ரூபாய் வரி பாக்கியுள்ளது. இந்த பாக்கி வரி ஒன்றேகால் இலட்சம் ஒழுங்காக வசூலிக்கப்பட்டிருந்தால் இந்த நெருக்கடி இந்த நகரவைக்கு ஏற்பட்டிருக்காது எனக் கருதப்படுகிறது. டிசம்பர் மாதச் சம்பளம் மட்டுந்தான் இன்னும் கொடுக்கப்படவில்லை என்றும், இதில் ரூ. 50 மட்டும் முன்பணமாகக் கொடுக்கப்படுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: On a Point of Clarification. இப்போது கூட அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. ஆகவே ஆசிரியர்களுக்கு எப்படியாவது சம்பளம் கொடுக்கப்பட்டாக வேண்டும்; அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை தனியாக எடுக்க இருக்கிறது என்று சொன்னால், உபயோகமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கு பொதுக்கணக்கில் சுமார் 11 லட்ச ரூபாய் இருக்கிறது, அதிலிருந்து பற்றாக்குறையை நிறைவுசெய்து கொள்ளலாம் என்று